**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV,BNSS)

| | |
|---|---|
| Case No. | : STC No.741/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 5 |
| Name | : சேர்மராஜ், வயது 38 |
| Father Name/Husband Name | : மகாலிங்கம் |
| Village | : ஆவல்நத்தம் |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of January 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1. நான் ஆவல்நத்தத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 27.11.2024 ஆம் தேதி மாலை 06.40 மணியளவில் நானும், பாலமுருகன், மூக்கையா, முத்துவீரன் என்பவரும் கொத்தனார் வேலை முடிந்து கொண்டு வீட்டிற்கு எங்களது வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். நானும், பாலமுருகன் என்பவரும் என்னுடைய வாகனமான Splender bike ல் சென்று கொண்டிருந்தோம். முத்துவீரனும், மூக்கையாவும் அவர்களுக்கு சொந்தமான TVS XL வண்டியில் முத்துவீரன் ஓட்ட மூக்கையா பின்னால் உட்காந்து பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது லாயல் மில் முக்கு வளைவில் மினி பஸ் ஒன்று மேற்கேயிருந்து வடக்காமல் வந்து TVS XL வண்டி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது.

2. அந்த விபத்தில் முத்துவீரனுக்கு இடது முட்டுக்கு மேலே காயம் ஏற்பட்டது. மூக்கையாவுக்கு வலது காலில் காயம் ஏற்பட்டது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு நானும், பாலமுருகன் என்பவரும் காயம்பட்ட முத்துவீரன் மற்றும் மூக்கையாவை சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். விபத்தை ஏற்படுத்திய மினி பஸ் ஓட்டுனரை நான் பார்த்தேன். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய மினி பஸ்ஸின் ஓட்டுனர் ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. விபத்து லாயல் மில் காலனியின் திருப்பத்தில்தான் நடந்தது. மினி பஸ் எங்களுக்கு எதிரே வந்தது. மினி பஸ்க்கு முன்புறம் வலது பக்கத்தில் காயம்பட்டவர்கள் அடிபட்டு விழுந்தார்கள். உடனே அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் கூடி மினி பஸ் வருகிறது பார்த்து வரவேண்டாமா என்று சத்தம் போட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் போலீசார் தகவல் கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். போலீசார் முதலில் பாலமுருகனிடம் புகார் வாங்கினார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

4. மினி பஸ் ஓட்டி வந்த நபரை விபத்து நேரத்தில் யார் என்று எனக்கும், பாலமுருகனுக்கும் தெரியாது. போலீசார் மினி பஸ் டிரைவரை அடையாளம் காட்ட சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துவீரனுக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். முத்துவீரன் முறையாக உரிமம் எடுத்து வாகனம் ஓட்ட பழகி இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றாலும், முத்துவீரன் என்னுடன் பழகியவர் என்பதால் அவர் நஷ்டஈடு பெற சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.